உ

முருகன் துணை.

வேளாளகுலத்தி லவதரித்த

சுந்தரஜெயவீர சூரதீர கவிராஜ

கந்தசாமிப்பிள்ளை யவர்களியற்றிய

பக்திஸ்தோத்ரப்பதிகம்.

எஸ். பி. இராஜாராம் அவர்களது

சென்னை சூளை,

ஸன் ஆப் இந்தியா அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

1923.

ஜெயகணேசாயநமா.

கணேசர்தோத்திரப் பதிகம்.

சீர்பெற்றமூஷிகமீதேறிவந் தென்முகனே சிங்காரஜோதிமின்ன, பார்வதியும்பரமனும் முருகனெடு வானவர் ரிஷிமுனிவர்சித்தரின்னம், கார்மேகவண்ணனும் கஞ்சனுமசெயசெயா கணபதிதுணையென்னவும், பேர்பெற்றதேவாயென் சிந்தையில்விளையாடும் சுந்தரகணேஸ குருவே. க

அன்னையும்தந்தையும் குருதெய்வம் நீயென்றகரத்தினில்யானினைந்ததன், பன்னுமாமறைகள்புகழ்பரமனிடபாலனே பக்தர்கட்கினியமுதே, நன்னயமாகவென்மார்பில்லட்சுமிவாழ நாவில்சரஸ்வதியும்வாழ, அண்ணலேசெய்யுமென் சிந்தையில்விளையாடும் சுந்தரகணேஸ குருவே. உ

இலக்கண விலக்கியந்தாளமும் சங்கீதராகமுந்த வராமலே, கலக்கமில்லாமலே யான்கவிகள்பாடவுங் கஜமுகா துணைசெய்குவாய், உலகிலுனை விடயெனக்காருதவிசெய்குவார் ஒங்காரகணநாதனே, பலனுளுமெந்தனிடசிந்தையில் விளையாடும் சுந்தரகணேஸ குருவே.

வறுமைபிணிதுன்பமும் தொந்திரவுமெந்தனைய ணுகாமலேதுரத்தி, தருமநெறிதவராமல் தரணியில் வாழவும் வரமருளுமெந்தனுக்கு, பரமனருள்செல்வ

மேபக்தர்கள்சகாபமே முத்திக்குகர்த்தவ்யமே, பிர காசவடிவேயென் சிந்தையில்விளையாடும் சுந்தரகணே ஸகுருவே. ௪

முப்பழம்சர்க்கரைவவலுடன்கடலையும் சீனிகற் கண்டுதேனும், அப்பளம்போளியும் வடைதோசை யெள்ளுண்டை ஆமவடை மோர்க்குழம்பும், செப் பொணுமகிழ்ச்சியா லுண்டிடுந்தேவனே சிவனுக்கு கந்தமகனே, எப்போதுமுன்னடியர் சிந்தையில்விளை யாடும் சுந்தரகணேஸகுருவே. ௫

கணேஸர்தோத்திரம்-முற்றிற்று.

௨

கடவுள் துணை.

திருப்போரூர் திருமுருக வடிவேலர் தோத்திரப் பதிகம்.

திருமேனியெங்குந் திருவெண்ணீறிலங்க திருக் கைகளில்வேலணிந்து, பெருமைசேர் மயில்மீதில்பிரி யமுட னேறியேபக்தர்கள் கண்டுமகிழ, திருநடனமா டிவருந்தேவர்கள்சேனதிபதி யென்தீவினையைபோக் குதற்குள், திருவடியைநம்பினேன் காருந்திருப்போ ரூர் திருமுருகவடிவேலனே. க

புண்ணியவசத்தினு லுன்பக்தனுகவிவ் வுலகத்தில்யான்பிறந்தேன், பண்ணவர்சேனுபதி தெய்வானைவள்ளிமகிழ்பரமகுருவானபொருளே, விண்ணுடர்போற்றும் வடிவேலனையெந்தனிரு கண்ணேயெந்தன்கருத்தே, நண்ணினே னுன்பாதங்காருந்திருப்போரூர் திருமுருகவடிவேலனே. உ

நாட்டமாயிலக்கண விலக்கியமறிந்திலேன் நாதனேயுந்தனருளால், பாட்டுகளும்வெண்பா விருத்தராகங்களும் பதிகங்கள்கீர்த்தனைகளும், கூட்டியேசெந்தமிழ் கவிக்கொடியும்நாட்டியே குவலயத்தோர்கள் மகிழ, தாஷ்டியாய் பாடவரந்தாருந் திருப்போரூர்திருமுருக வடிவேலனே. ங

வஞ்சனைசூனியம் பேய்ப்பில்லியேவலும் விஷக்கடியுப்சூதும்வாதும், நெஞ்சந்திடுக்கிட்டு என்னிடம் வாராமலே தடுமாறிநிலைகலங்கி, அஞ்சியேயறுநூறு காதவழியோடவே யடித்துத்துரத்துமையா, நஞ்சுண்டகண்டனருள் பாலர்திருப்போரூர் திருமுருகவடிவேலனே. ச

தாருகாசூரனை வதைத்தமரர்துயர்தீர்த்த தணிகைவாழ்முருகையனே, ஓராறுமுகந்துலங்க வெண்ணீரணிந் தொய்யாரமயிலேறியே, பாரோர்துதித்து மகிழ் திருநடனமாடிவரும் பன்னிருகைசிங்காரனே, நேராக வந்தெனைக்காருந் திருப்போரூர் திருமுருக வடிவேலனே. ரு

பன்னிருகைவடிவேலனென் றுணையிருக்கையில் பயமில்லையெந்தனுக்கென், றுன்னியுன்பாதாரவிந்தத்தைமறவாமல் பன்னினேன்பாடலாக, சென்னியில் சந்திரர்கங்கையைதாங்கிய சிவனுக்குகந்த புதல்வா, என்னிடரைதீர்த்தென்னைக் காருந்திருப்போரூர்திருமுருகவடிவேலனே. ௬

பரமனருள்பாலனே பக்தர்கள்சகாயனே சரணடைந்துனைநம்பினேன், பிறவிபிணிபாபமுந் தீவினையுமெந்தனை யணுகாமலேதுரத்தி, தரணியில்கீர்த்திகள் பெற்றுபெருமையாய்வாழவும் வரமருளுமெந்தனுக்கு, சரவணையிலேவிளையாடுந் திருப்போரூர்திருமுருகவடிவேலனே. ௭

முருகேசனேயருணகிரிநாதருக்குபரம குருவாக வந்தபொருளே, திருமால்தனக்குமருமகனே குறச்சிறுமிதழுவும்பணைத்தோளனே, திருவானஜோதிமயமயில்மீதிலேறிபுகழ் தெய்வானைவள்ளியுடனே, வருவாய்எனக்குவரந் தருவாய்திருப்போரூர் திருமுருகவடிவேலனே. ௮

தண்டாயுதக்கடவு ளென்றால்பேயேவலுந் தீண்டாதுமண்டலத்தோர்,கொண்டாடுந்தெய்வசிகாமணியேயுனைப்பணிந் தின்னேரமெந்தனுவால், பண்டோருரைத்த செந்தமிழாலுந்தன் பெருமைபாடினேன் பரமகுருவே, விண்டேனென்தீவினைகளெல்லாந் திருப்போரூர் திருமுருகவடிவேலனே. ௯

ஆலாலமுண்டபரமேசனிட பாகமதி லன்புடன் வாழுமுமையாள், பாலா அரக்கர்குலகாலனே குண சீல கந்தமலை தனிலமர்ந்த, மூலாதாரப்பொருளேமுத் திக்கு கர்த்தவ்ய மெய்ஞ்ஞான கந்தஸ்வாமி, வேலா யுதா யெனைக்காக்குந் திருப்போரூர் திருமுருக வடி வேலனே,

திருப்போரூர் திருமுருக வடிவேலர் பதிகம்

முற்றிற்று.

—

சிவசம்புலிங்கநாதர் பதிகம்.

திருமேனி தனிவர வாபரணந் துலங்கவுந் திருநீ றணிந்தவுருவே, முருகனுக் கழியாவரந்தந்தி ரச்சித்த முக்கண்ண ஜோதிபரமே, திருமாதுலட்சுமி என்மார் பில்கொலு வீற்றிருந் தென்னாளுங் வாழ்ந்திருக்க, பெருமானுமாபதி வரந்தந்திரட்சியும் சிவசம்பு லிங் கேசனே. க

எறும்புஈ யானைமுனி ரிஷிமனித ரமரர்கள் சகல ஜீவராசிகட்கும், குறையொன்றுமில்லாமல் படியளந் திடுமெமுதேசர் வாட்சநாயகா, வறுமைபிணி துன்ப மும் என்னாளும் அடையாமல் வையகந்தனி மேன்மை யாய், பெருமையாய் பிழைக்கவரந் தந்தென்னை ரட்சி யும் சிவசம்புலிங்கேசனே. உ

மறலியை யுதைத்திட்டு மார்க்கண்டனுக்கெட்டு வய தளித்தன்பருக்கு, குறையொன்றுமில்லாமல் வரந்தந் திரட்சிக்கும் கயிலைவாழ் சர்வேஸனே, மறவேனுன் பாதத்தை யொருநாளுமென்னுயிர்க் காதாரமான சிவமே, பிறைசூடி யுமைநேசனே யுன்னைநம்பினேன் சிவசம்பு லிங்கேசனே. ௫

கரிதனை யுரித்தகரர் நெஞ்சங்கலங்கிட திரிபுர மெரித்தசிவமே, அரியயன்தேடவுங் காணாதசோதியே திருவண்ணாமலைவாசனே, நரியைபரியாகவே செய்தடி யர் துயர்தீர்த்த நாதாந்த சோதிமயமே, அரகராசங் கரா வரந்தந்திரட்சியும் சிவசம்பு லிங்கேசனே. ௬

காலனெந்தனைமெத்தகஷ்டப்படுத்தவொட்டாம லே காருமையா, நீலகண்டேசனே நித்தனே சுத்தபரி பூரணையமுர்தலிங்கா, ஆலாலமுண்டகுணசீலனே எந் தன்மனதமர்ந்திடும் சொக்கலிங்கா, லீலாவினோதனே வரந்தந்திரட்சியும் சிவசம்புலிங்கேசனே. ௭

அம்புலியை செஞ்சடை யணிந்திடு முக்கண்ண னே வகிலபுவனங்கள் புகழும், கற்பமாமதயானைமாமு கம் விளங்கிடும் கணபதியை யீன்றசிவமே, சம்போ மகாதேவ வென்றமரர் தொழுதிடும் சத்துசித்தானந் தமே, நம்பினே னுன்பாதம் வரந்தந்திரட்சியும் சிவ சம்புலிங்கேசனே. ௮

துன்பமும்பிணிகளுங் கன்மமுமெந்தனை யென் னாளுமணுகாமலே, இன்பம்வைத்தென்மீதி லுன்னரு

விருக்கவே யீசாவரந்தாருமென், றுன்னடி வணங்கி ருன் பாதாரவிந்தமென் சென்னியில் சூடியேன்யான், பன்னுமற புகழ்பரமே வரந்தந்திரட்சியும் சிவசம்பு லிங்கேசனே. எ

பூமியில்யான்பிறந்ததோ கஷ்டங்களனுபவித்தே னையனே, காமக்குரோத லோபமோகமத மாச்சரிய மென்னையணுகாமல் செய்யும், சோமனை சிரத்திலும் மான்மழுகரத்திலும் துலங்கவே யணிந்தமெய்யாராம லிங்கையனே வரந்தந்திரட்சியும் சிவசம்பு லிங்கே சனே. அ

பர்வதராஜன்பெற்ற பார்வதிமகிழ்ந்திடும் பரம சிவசோதியொளியே, பிரியம்வைத் தெந்தனைக் காரு மையா நடராஜனே யென்னிடத்தில், துர்வியாதி துர் மரணமென்றைக்கும்வாராமல்செய்யுமையாயீஸ்வரா, சர்வபரிபூரண வரந்தந்திரட்சியும் சிவசம்பு லிங்கே சனே. சுா

சந்திரனைகங்கையை சடையிற் றரித்துமையை யிடபாகம் வைத்தசிவமே, அந்தரத்தமரர்புகழ் நந்தி கேஸ்வரர்தாழ கந்தன்கணபதியும்சூழ, சுந்தர ஜெய வீர சூரதீர கவிராச கந்தசாமிப்பிள்ளையின், சிந்தை யில் கொலுவமர்ந் தென்னாளும்நீங்காத சிவசம்பு லிங் கேசனே.

சிவசம்புலிங்கநாதர் பதிகம்
முற்றிற்று.